**TAMILNADU STATE TRANSPORT CORPORATION (SALEM ) LTD., SALEM - 7**
**TENDER CUM PUBLIC-AUCTION ( 28.04.2022) -CONDEMNED BUSES AS SCRAPED VEHICLE TENDER FORM**
**SALEM REGION**

E001/A&D/TNSTC/SALEM/2021

Tender closing Dt. 27.04.2022 Time :14.00 p.m
Public -Auction Date: 28.04.2022 Time:11.00 a.m
Tender opening Date 28.04.2022 Time :12.00 a.m
Tender closing & opening Place SALEM H.O
VEHICLES ARE WITHOUT RC BOOK

## SALEM REGION

| Sl. No - LOT NO | Vehicle No | Make / Model & WB | Qty | GST % | Type | Place of Parking | Rate Quoted Per No. (exclusive of Taxes) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | TN 30 N 1164 | TATA- 2012 - 232" | 1 NO | 18% | TOWN BUS | NAMAKKAL BRANCH | |

TENDERER SIGNATURE :-

D.D NO: Dt:

D.D AMOUNT :

NAME OF THE BANK :

TOTAL LOT QUOTED :

CORRECTION LOT Nos :

GST NO: : PAN NO:

1. GST எண் பதிவுசெய்தவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதி உண்டு, பதிவு செய்யாத டெண்டர் படிவங்கள் நிராகரிக்கப்படும் .

**2. GST பதிவு எண் நகல் இத்துடன் இணைக்கவும்.**

3. விற்பனை வரி மற்றும் இதர தீர்வைகள் பொருட்கள் ஒப்படைக்கும் நேரத்தில் உள்ள சட்டப்படி வசூல் செய்யப்படும்.

# <u>தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) வரை., சேலம் 636 007.</u>
# <u>ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்திற்கான விதிமுறைகளும் வரையறைகளும்</u>

1) ஒப்பந்தப்புள்ளி படிவங்களை நேரில் பெற சேலம் தலைமையகம் துணை மேலாளர் (பொருட்கள்) அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 17.00 மணிக்குள் ரூ.590/- (Rs.500/- + GST 18%) வங்கி வரைவோலையாக / ரொக்கமாகவோ (திருப்பித்தரதக்கதல்ல) நேரடியாகவும் தபால் மூலம் பெற கூடுதலாக ரூ 50/- செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி டெண்டர் படிவங்களை வெப்சைட் மூலமும் இலவச இணைஇறக்கம் (DOWNLOADED) செய்துகொள்ளலாம். ( http://www.tenders.tn.gov.in)

2) ஒவ்வொரு ஒப்பந்த புள்ளி படிவமும் உரிய பிணை (முன்) வைப்புத் தொகையாக பேருந்து ஒன்றுக்கு ரூ10,000/- வீதமும், சிறுவாகனம் ஒன்றுக்கு ரூ 5000/- மற்றும் இரு சக்கர வாகனம் ஒன்றுக்கு ரூ 1000/- தனித்தனியாகவும், மற்ற அனைத்து கழிவு பொருட்களுக்கும் அப்பொருட்களின் விற்பனை மதிப்பில் 10% தொகையும் செலுத்த வேண்டும். பொருட்களின் மொத்த விலை மதிப்பு ரூ1,000/- ம் அதற்கு குறைவாக இருப்பின் அப்பொருட்களின் முழு விற்பனை மதிப்பு தொகையை பிணை (முன்) வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். ஏல படிவத்தில் உள்ள லாட்டுகளுக்கான பிணை (முன்) வைப்புத் தொகையினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) லிட் (TNSTC SALEM Ltd, SALEM) என்ற பெயருக்கு பெறப்பட்ட வங்கி வரைவோலையாக (DEMAND DRAFT) எடுத்து, டெண்டர்/பொது ஏல விதிமுறைப் படிவத்தில் கையொப்பம் இட்டு, பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவங்கள், சேலம் மற்றும் தருமபுரி தலைமை அலுவலகத்தில் உள்ள டெண்டர் பெட்டியில் ஏலம் நடைபெறும் நாட்களுக்கு முதல் நாள் மாலை 14.00 மணிக்குள் செலுத்தவேண்டும்.

3) அட்டவணையில் அல்லது ஏலத்தில் குறிப்பாக ஏதேனும் கூறப்படாவிட்டால் கழிவு செய்யப்பட்ட இரும்பு பொருட்கள் மற்றும் கழிவு பொறி எண்ணெய் ஆகியவைகள் தொகுப்பு முறையில் அவைகள் இருக்கும் நிலையிலேயே (AS IT IS) ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் பொருட்களுக்கு உத்திரவாதமோ அல்லது சான்று வலிமையோ கொடுக்கப்பட மாட்டாது.

4) ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள்ளாக மாலை 14.00 மணிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் துணை மேலாளர் (பொருட்கள்) கூட்டாண்மை அலுவலகம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட் சேலம் மற்றும் துணை மேலாளர் (ஏ/வி) தருமபுரி மண்டல அலுவலகம் தருமபுரியில் வைக்கப்பட்டுள்ள மூடி முத்திரை இடப்பட்ட பெட்டியில் செலுத்தப்பட வேண்டும்.

5) ஏலம் ஒப்பந்தபுள்ளி படிவத்தில் குறிப்பிடப்பட்ட தேதியில் நடத்தப்படும். ஏலம் முடிந்த பிறகு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்கள் / ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

6) ஏலத்தில் கலந்து கொள்பவர்களிடம் நுழைவு கட்டணமாக ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) வசூலிக்கப்படும். மேலும் ரூ.1000/- செலுத்திய தொகை ஏலம் முடிந்த பின்னர் திருப்பியளிக்கப்படும்.

7) ஏலம் கேட்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பொருட்களை பார்வையிடுவதற்கு சங்ககிரி / நாமக்கல் / வாழப்பாடி கிளை மற்றும் தருமபுரி புறநகர் கிளை (பாரதிபுரம்), RC UNIT A JETHELLI பிரிவில் ஏல படிவத்துடன் பார்வையிடலாம். பொருட்களை பார்வையிட்ட பின்னரோ அல்லது பொருட்களை எடுத்துச் செல்லும்போதோ அப்பொருட்களை குறித்து எவ்விதமான புகார்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8) ஒப்பந்தபுள்ளி படிவத்தில் விலை குறிப்பிடும்போது அதில் குறிப்பிடப்பட்டுள்ள அலகுகளுக்கு (மெட்ரிக் டன், நெம்பர், லாட்) மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும். விலைக்குறிப்பிடும் போது எண்ணாலும், எழுத்தாலும் குறிப்பிட வேண்டும் அவ்வாறு குறிப்பிடாத ஒப்பந்தபுள்ளி படிவங்கள் தள்ளுபடி செய்ய நேரிடும்.

9) தொகுப்புகள் / பொருட்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஏலத்தில் விடப்படும். ஏலக்குழு அல்லது மேலாண் இயக்குநரின் ஒப்புதலின் பேரில் அதிகமான விலை கேட்பவருக்கு அவர்கள் கேட்ட விலை சரியானதாக இருந்தால் மட்டுமே ஒப்புதல் அளிக்கப்படும். ஒரு வேளை ஏலம் குறித்து சச்சரவு ஏற்பட்டால் உச்சத்தொகைக்கு அடுத்த குறைந்த தொகையில் இருந்து மறு ஏலம் விடப்படும். டெண்டர்/பொது ஏலம் இரண்டு ஏலத்திலும் ஒரே லாட்டுக்கு சமமாக விலை (equal rate) கோரியிருந்தால் அந்த லாட்டை ரத்துசெய்யவோ அல்லது வழங்கவோ ஏலக்குழுவினர் முடிவே இறுதியானது.

10) ஏலத்தில் அதிக விலை கோரியவர் அப்பொருளின் மதிப்பு ரூ.1,000/- மற்றும் அதற்கு குறைவாக இருப்பின் அப்பொருளின் முழுத்தொகையினை பிணைவைப்பு தொகையாகவும், அப்பொருளின் மதிப்பு ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) அல்லது பொருளின் மதிப்பு 25% இதில் எது அதிகமோ அத்தொகையினை பிணை வைப்புத்தொகையாக பணமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ உடன் (DEMAND DRAFT) செலுத்த வேண்டும். இல்லையேல் அந்த நபரின் நுழைவு கட்டணம் மறுக்கப்படும்.

11) விற்பனை வரி மற்றும் இதர தீர்வைகள் பொருட்கள் ஒப்படைக்கும் நேரத்தில் உள்ள மத்திய அரசு சட்டப்படி வசூல் செய்யப்படும்.

12) ஏலம் முடிந்தபின் ஒப்பந்தபுள்ளி படிவங்கள் திறக்கப்பட்டு ஏலத்தில் அதிகவிலை கோரியவருக்கோ அல்லது ஒப்பந்தபுள்ளியில் அதிக விலை குறிப்பிட்டவருக்கோ இதில் எது அதிகமோ அவருக்கு வழங்கப்படும். பணத்தை முழுமையாக செலுத்திய பின்னரே ஒப்படைப்பு ஆணை வழங்கப்படும்.

13) ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் எடை தோராயமானது. அதிக விலை கோரிய ஒப்பந்தகாரர் / ஏலதாரர் பொருட்களை அவைகள் உள்ள நிலையிலேயே முழுமையாக எடுத்துச் செல்ல வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் பொருட்களை எடுத்துச் செல்லாதவரின் பிணை வைப்புத்தொகை திருப்பி அளிக்கப்படமாட்டாது.

14) ஏலத்தில் குறைவாக மதிப்பிட்டவர்கட்கு அவர்கள் பணமாக செலுத்திய பிணை வைப்புத்தொகையும், வரைவோலையாக செலுத்தியவர்கட்கு வரைவோலை வங்கியில் பணமாக்கப்பட்ட பின்னர் குறுக்கு கோடிட்ட காசோலையாக வழங்கப்படும்.

15) பிணை வைப்புத் தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

16) வெற்றியார்ந்த ஒப்பந்ததாரர்கள் / ஏலதாரர்கள் ஏலம் எடுத்த பொருட்களுக்கு விற்பனை உறுதியாக்க ஆணை அனுப்பட்ட தேதியில் இருந்து ஏழு நாட்களுக்குள் அலுவலக நாட்களில் (பகல் 12.00 மணிக்கு முன்னர்) பொருட்களின் நிலுவைத் தொகையினை விற்பனை வரி மற்றும் தீர்வைகளை வரைவோலையாகவோ முழுமையாக செலுத்தி பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

17) ஒப்பந்ததாரர்கள் / ஏலதாரர்கள் அலுவலக நேரத்தில் மட்டுமே பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அதாவது காலை 09.00 மணி முதல் 12.00 வரையிலும், மதியம் 13.00 மணி முதல் 17.00 வரையிலும் அவர்களின் சொந்த செலவில் / ஏற்பாட்டில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். எக்காரணம் கொண்டும் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் பொருட்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

18) பொருட்கள் எடுத்துச்செல்ல வேண்டியவர்கள் ஒப்படைப்பு அதிகாரியிடம் தங்களுக்கு வேண்டிய நேரம் ஒதுக்கும்படி கேட்டு அனுமதி பெற்று பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

19) குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு பின்னர் தாமதமாக டெலிவரி எடுக்க செலுத்தப்படும் அப்பொருட்களின் தொகைக்கு 18% p a வட்டியுடன், மேலும் தரை வாடகையாக வரியுடன் மொத்தமதிப்பில் நாள் ஒன்றிற்கு 1% சேர்த்து மேலும் ஏழு அலுவலக நாட்களுக்கு பொருட்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும். இந்நாட்களுக்கு பின்னரும் பொருட்கள் எடுத்துச்செல்லவில்லை எனில் பிணை (முன்) வைப்புத்தொகை (பறிமுதல்/forfeit) செய்யப்படும். மேலும் அப்பொருட்கள் மேலாண் இயக்குநர் அல்லது ஏலக்குழுவினரால் மீண்டும் ஒப்புதல் பெற்று ஏலத்தில் சேர்க்கப்படும்.

20) ஏலத்தில் / ஒப்பந்த புள்ளியில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு எந்த காரணமுமின்றி அட்டவணையில் குறிப்பிட்ட பொருட்களை / தொகுப்புகளை நீக்க கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

21) எந்த காரணத்திற்காகவும், தொகுப்புகளையோ, பொருட்களையோ வரைமுறைகளையோ மாற்றியமைக்கவோ, ரத்து செய்யவோ மேலாண் இயக்குநர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஏலக்குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு.

22) ஒப்பந்த படிவத்தில் விலை குறிப்பிடும்போது அந்தந்த தொகுப்புகளுக்கு உள்ள விலையை எண்ணாலும், எழுத்தாலும் குறிப்பிடவேண்டும். அவ்வாறு குறிப்பிட்டவைகளில் விலை வித்தியாசம் இருந்தால், அதில் உள்ள அதிகபட்ச விலையை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

23) ஒப்பந்த படிவத்தில் குறிப்பிட்டுள்ள விலை மற்றும் விதி முறைகளுக்கு ஒத்துக்கொள்வதாக ஒப்பந்ததாரர்கள் கையொப்பம் இட வேண்டும். அவ்வாறு இல்லாத ஒப்பந்த படிவங்கள் நிராகரிக்கப்படும்.

24) பழைய கழிவு ஆயில் / கழிவு பேட்டரிகள் / ரப்பர் பொருட்கள் / டயர் , டியுப்,பப்பிங் தூள் டயர் வேஸ்ட் பொருட்கள் கோரும் டெண்டர் ஏலதாரர்கள் டெண்டர் படிவத்துடன் கீழ் கண்ட சான்றிதழ்களை சமர்ப்பிக்கவேண்டும்.

அ) மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்ட பதிவு (1. ஹெசார்டஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் Rules 1989 & 2. Waste ( Management and Transboundary movemet) Rules 2016" சான்றிதழ்.

ஆ) சம்மந்தப்பட்ட மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்ட உரிமை சான்றிதழ்.

இ) சம்மந்தப்பட்ட மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உட்பிரிவு 25/26 நீர் (P&CP) சட்டம் 1974 மற்றும் உட்பிரிவு 21 காற்று (P&CP) சட்டம் 1981-யின் படி வழங்கப்பட்ட உடன்பாடு சான்றிதழ் மற்றும் சம்மந்தப்பட்ட மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்பட்ட இசைவுச் சான்றிதழ்.

மேலாண் இயக்குநர்.

மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

டெண்டர்தாரர் / ஏலதாரர் கையொப்பம்.